1975 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) 1974—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், சென்னையிலிருந்து போந்தவாக்கம் சென்றுவந்த 113எ பேருந்து ஒன்று மட்டும், பெரிய பாளையத்தில் நடைபெற்ற திருவிழாவிற்காக சென்னையிலிருந்து பெரிய பாளையத்திற்கு அனுப்பப்பட்டு வந்தது. ஆகவே, மொத்தப் பயணத் தடவைகளில் 25 சதவீதம் இயக்கப்படவில்லை. அக்டோபர் 1974 முதல் பேருந்துகள் எப்போதும்போல் செலுத்தப்படுகின்றன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, திருவிழாக் காலங்களில் அந்த ஊருக்குப் போய்க்கொண்டிருக்கிற பஸ்களை வேறு ஊரில் திருவிழா நடக்கின்ற காரணத்தினால் அங்கே அனுப்பிவிடுகிறார்கள். அதனால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, வழக்கமாக விடப்படுகிற ஊர்களுக்கே ஒரு நாளும் தவறாமல் செல்லும் முறையில் தொடர்ந்து 113எ என்ற பஸ் தடங்கல் இல்லாமல் சென்றுவர ஏற்பாடு செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திருவிழாக் காலங்களில் எதிர்பாரா அளவிற்கு கூட்டம் நெரிசல் இருப்பதால் உடனடியாக, அங்கேயிருந்து பல்வேறு இடங்களுக்கு மக்கள் செல்லவேண்டிய நிலைமை இருப்பதால் அப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஒருநாள், இரண்டு நாள் தான் திருவிழாக்கள் நடைபெறும் என்ற காரணத்தால் பெரும் பாதிப்பு ஒன்றும் இதனால் ஏற்பட்டுவிடாது.

TRAINING PROGRAMME FOR TEMPLE GUIDES

*619 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the details of the training given to the Temple guides in the Training Centre at Madurai ;

(*b*) the number trained so far ;

(*c*) whether there is any proposal under the consideration of the Government to open more training centres in the State ; and

(*d*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) மதுரை அருங்காட்சியகத்தின் மேற்பார்வையில் 1974-ம் ஆண்டு "வழி காட்டுவோர் பயிற்சி வகுப்பு" முதல் நிலை, இடைநிலை, துவக்கநிலை என மூன்று இனங்களாக நடத்தப்பட்டது. இப்பயிற்சி வகுப்புகளில் சமயம், தத்துவம், கலாச்சாரம், மொழி, இலக்கியங்கள், சமூகவியல், கட்டிடக்கலை, சுற்றுலா முதலான பொருள் குறித்து பயிற்சி கொடுக்கப்படது. பயிற்சியை முடித்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

(இ) 90.

(உ) இல்லை.

(எ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : எத்தனை பேர்கள் இதிலே படித்து வருகிறார்கள் ? இதற்காக ஏற்படக்கூடிய செலவை ஹச்.ஆர். அண்ட் சி. போர்டே ஏற்றுக்கொள்கிறதா அல்லது அரசு கொடுக்கிறதா, இது மதுரை கோயிலுக்கு மட்டுந்தானா? மற்ற கோயில்களுக்கும் சேர்த்தா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சாதாரணமாக இந்தப் பயிற்சி வகுப்பு மத்திய அரசால் சென்னையில் நடத்தப்படுகிறது. மதுரை மீனாட்சி கோயில் மியூஸியத்தின் சார்பில் கடந்த ஆண்டு பயிற்சி கொடுக்கப் பட்டது. முதல்நிலை 36 பயிற்சி வகுப்புகள், இடைநிலை 37 பயிற்சி வகுப்புக்கள், துவக்கநிலை 20 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இதற் காகக் கட்டணம் 100, 50, 30 முறையே வசூலிக்கப்பட்டது. மேற் கொண்டு செலவு இருந்தால் கோயில் நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது என்று கருதுகிறேன். இந்தப் பயிற்சி பெற்றவர்கள் கோயில் முழுநேரப் பணியாளர்களாக சிலரும் பகுதிநேரப் பணியாளர்களாகச் சிலரும் இருக் கிறார்கள். ஏற்கனவே பணியாற்றிவருகிறவர்கள் முறையாகத் தங்கள் பணியை ஆற்றுவதற்கான முறையிலே இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

RATES FOR ARCHANAS.

*620 Q. THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether it is a fact that the rates for Archanas in temples under the control of Hindu Religious and Charitable Endowments Department in the State have been increased ; and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இந்து சமய அறநிலைய இலாகாவின் அதிகார வரம்பிற்குட்பட்ட ஆலயங்களில் சிலவற்றில் மட்டும் ஆலய நிர்வாகிகளால் அர்ச்சனைக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

(இ) சம்பந்தப்பட்ட திருக்கோயில்களின் நிர்வாகச் செலவுகள் அதிகரிப்பை ஈடு கட்டவும், திருக்கோயில்களின் நிதி நிலைமையை அபிவிருத்தி செய்வதற்காகவும் அர்ச்சனைக் கட்டண உயர்வு செய்யப் பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : இந்த அர்ச்சனைக் கட்டணம் பழனியிலே ஒரு விதமாகவும் மதுரையிலே ஒருவிதமாகவும் ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொரு விதமாகவும் இருக்கிறதே, ஏழை சாமி, பணக்கார சாமி